1993 மார்ச் 16]

குழந்தை பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது விஞ்ஞான பூர்வமாக உறிதியாக இருந்தால், அப்படிப்பட்ட மருத்துவர்களை நீதிமன்ற வழக்குகளிலிருந்து காப்பாற்றுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொன்னது, ஏற்கனவே மத்திய அரசும் சேர்ந்து, இதிலே ஒரு சதவீதத்தை அனுமதித்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட அளவு சதவீதம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு ஃபெய்லியர் ஏற்பட்டால் அதிலே தவறு இல்லை என்று சொல்லி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் எண்ணிக்கை கூடிவிடும்.; அந்த பர்சென்டேஜ் கூடிவிடும். எனவே, நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, திரு. மா.சா.மா. இராமச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

86 --

சென்னை நகரில் நெரிசல் நேரங்களில் இருக்கை இல்லாத பேருந்து விடல்.

* *9744*-திரு. மா.சா.மா. **இராமச்சந்திரன் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

சென்னை நகரில் நெரிசல் நேரங்களில் அதிகம்பேர் பயணம் செய்யும் வகையில் பயணிகள் இருக்கை இல்லாத பேருந்துகள் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மா.சா.மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "பீக் அவர்ஸ்" என்று அழைக்கப்படுகின்ற அந்த நெரிசல்மிக்க நேரங்களில் பேருந்துகளிலே அளவுக்கு அதிகமான

கூட்டங்கள் ஏறுவதால் நின்று கொண்டு செல்லும் பயணிகள் அமர்ந்து கொண்டு செல்லும் பயணிகளுக்கு இடையூறாக இருக்கின்றார்கள். இதனால் அவர்களுக்கிடையே சிறுசிறு சச்சரவுகள், பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கின்றன. அங்கே இருக்கின்ற இருக்கைகள் அகற்றப்பட்டால் அதிலே அதிகமா னபேர் நின்று கொண்டு பயணம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். மேலும், வயதானவர்கள், தாய்மார்கள், குழந்தைகள் போன்றவர்கள் பயணம் செய்ய வேண்டும் என்று கருதினால், தொடர்ச்சியாக அதுபோன்ற பேருந்துகள் விடப்படாமல், ஆல்டர்நேட்டிவ் பஸ்ஸஸ் - அதாவது இருக்கைகள் இல்லாமல் ஒரு பேருந்து, இருக்கைகளுடன் கூடிய ஒரு பேருந்து என்று மாற்று முறையிலே விடுவதற்கு நம்முடைய அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதிலே இருக்கைகள் 48. மொத்தம் 73 நபர்களை ஏற்றிச் செல்லுகின்ற வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவதைப்போல, இருக்கைகள் அத்தனையையும் அகற்றிவிட்டு, பேருந்துகளை இயக்க முடியாது. காரணம் நோயாளிகள் இருப்பார்கள்; வயது முதிர்ந்தவர்கள் இருப்பார்கள்; ஊனமுற்றவர்கள் இருப்பார்கள். ஆகவே, அவர்கள் பயணம் செய்யும்பொழுது இருக்கை இல்லாமல் பயணம் செய்ய முடியாது என்கிற காரணத்தால் இதை அரசு ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். துரை முருகன்.

திரு. கே.எஸ். துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரிலே கூட்ட நெரிசலைத் தவிர்க்க டபுள் டெக்கர் பஸ் என்று சொல்லக்கூடிய மாடி பஸ்களை விட்டால், கூட்டம் அதிகமாக இருக்கிற நேரங்களிலே அதிகமான நபர்களை ஏற்றிச் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கும். அப்படி இல்லாவிட்டாலும் கூட அந்த நேரங்களிலே- இப்பொழுது நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்ற இரண்டு பஸ்களை இணைத்துத் தூர பயணங்களுக்குப் பயன்படுத்துகிறோம்-அதுபோல இணைப்பு பஸ்கள் விட்டாலும் கூட்ட நெரிசலை ஓரளவுக்கு நாம் சமாளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாடி பஸ்ஸில் ஏறி இறங்குவது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. இப்பொழுது 100 மீட்டருக்கு ஒரு முறை பஸ் ஸ்டாப்புகள் இருக்கின்றன. ஆகவே, அதுபோன்ற சாத்தியக் கூறுகள் அரசுக்கு இல்லை. இரண்டாவதாக, நீங்கள் குறிப்பிட்டதைப்போல, ஒரு பஸ்ஸை இணைத்துச் செல்லுகின்ற வாய்ப்பு குறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சு. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் எப்பொழுது பார்த்தாலும் நெரிசல் அதிகமாக இருக்கிறது. ஆகவே, தனியார் பேருந்துகளை விடுவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, மீண்டும் கூடுதலாக 550 பேருந்துகளை வாங்குவதற்காக உலக வங்கியினர் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற நெரிசலைக் குறைப்பதற்காக அரசு விரைந்து தன்னுடைய பணிகளைச் செயலாக்கிக் கொண்டிருக்கிறது. கூடுதலாகப் பேருந்துகளை இயக்க இருக்கிறோம்.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நாம் ஏற்கெனவே கிராமப்புறங்களிலே, நகரப் பேருந்துகளை எல்லா இடங்களிலும் ஓரளவிற்கு விட்டிருக்கிறோம். அப்படி விட்டதிலே, டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக, ஏற்கெனவே ஓட்டிய இடங்களிலே மீண்டும் ஓட்டமுடியாமல் இருக்கிறது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத் தனிக் கேள்வி போடவும். மூலக்கேள்வி, சென்னை நகரில் கூட்ட நேரங்களில் இருக்கை இல்லாத பேருந்துகள் விடுவது பற்றியது. நீங்கள் டீசல் சம்பந்தமாகக் கேட்கிறீர்கள். இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 87, திரு. ஆ. அறிவழகன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.